## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆடித் திங்கள் 27–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.399/2018 –ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.01/2019**

**1. ரமேஷ்**
**2. மலர்கொடி**
**3. ராணி**
**4. மல்லிகா**
**5. அமுதா**
**6. அருணாதேவி**
**7. கனகமணி ... மனுதாரர்கள்/வாதிகள்.**

**–எதிர்–**

**1. ஜெயலட்சுமி**
**2. R. ரவிச்சந்திரன்**
**3. சித்ரா**
**4. தனபால்**
**5. உமா**
**6. சுரேஷ்**
**7. அருள்மொழி**
**8. பாஞ்சாலி**
**9. தர்மசம்வர்தனி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

**10. அன்பழகன்**
**11. கலைவாணி**
**12. இளவர். ஹரினி**
**rep by natural guardian/father ஸ்ரீனிவாசன் ... எதிர்மனுதாரர்கள்/ உத்தேசதரப்பினர்கள்/ 09–ஆம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள்.**

இந்த மனு 05.08.2025-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. S. N. D. ஆனந்தபத்மநாபன்** அவர்களும் 01 முதல் 08 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையிலும் 09, 10-ஆம் எதிர்மனுதாரர்கள் இறந்த

நிலையிலும் 11-ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையிலும் 12-ஆம் எதிர்மனுதாரருக்காக நீதிமன்ற காப்பாளர் வழக்குரைஞர் **திரு. B. வெங்கடராமலிங்கம்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந் நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

வழக்கு நிலுவையில் இருந்து வந்தபோது 30.04.2019-ஆம் தேதியன்று இறந்துபோன 09-ஆம் பிரதிவாதி தர்மசம்வர்த்தினியின் வாரிசுகளை 10 முதல் 12 வரையிலான பிரதிவாதிகளாக சேர்ப்பதற்கு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் **22**-ஆம் வகுமுறையின் **04**-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் வாதிகள் ஆவர். 01 முதல் 08 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளும் மனுதாரர்கள்/வாதிகளும் பங்குரிமையர்களள் ஆவர். இறந்துபோன 09-ஆம் பிரதிவாதி 08 ஆம் பிரதிவாதியிடமிருந்து மற்ற பங்குரிமையர்களின் சொத்தையம் சேர்த்து கிரயம் வாங்கியவர் ஆவார்.

02. வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 30.04.2019-ஆம் தேதியன்று 09-ஆம் பிரதிவாதி தர்மசம்வர்த்தினி இறந்துவிட்டார். அவருக்கு 10-ஆம் எதிர்மனுதாரர் அன்பழகன் கணவர் ஆவார். 11-ஆம்

எதிர்மனுதாரர் கலைவாணி மகள் ஆவார். 12-ஆம் எதிர்மனுதாரர் இளவர் ஹரினி தர்மசம்வர்த்தினிக்குமுன் இறந்துபோன அவருடைய மகள் விஜயலட்சுமியின் மகள் ஆவார்.

03. இந்த வழக்கை மேல்நடத்த இறந்துபோன 09-ஆம் பிரதிவாதியின் வாரிசுகளான 10 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்களை முதலேற்பு வழக்கில் 10 முதல் 12 வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

04. இந்த மனு நிலுவையில் இருந்து வந்தபோது 10-ஆம் எதிர்மனுதாரர் அன்பழகன் இறந்துவிட்டார். 11-ஆம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை நேரடியாக சார்வுசெய்ய முடியாததால் செய்திதாள் விளம்பரம் மூலம் சார்வுசெய்வதற்கு நீதிமன்றம் ஆணையிட்டிருந்தது அதற்கான நடவடிக்கையை மனுதாரர்கள் எடுக்காததால் 11-ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. 12-ஆம் எதிர்மனுதாரரான இளவர் ஹரினியின் நீதிமன்ற காப்பாளர் எதிருரை தாக்கல்செய்துள்ளார். 12-ஆம் எதிர்மனுதாரரை முதலேற்பு வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க ஆட்சேபனை இல்லை என்று கூறியுள்ளார்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

**05. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

06. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 30.04.2019 ஆம் தேதியன்று 09-ஆம் பிரதிவாதி தர்மசம்வர்த்தினி இறந்துவிட்டார் என்ற சங்கதியை இரு தரப்பினரும் ஒப்புக்கொள்கின்றனர். இந்த மனு நிலுவையில் இருந்து வந்தபோது 14.04.2025-ஆம் தேதியன்று 10-ஆம் எதிர்மனுதாரர் அன்பழகன் இறந்துவிட்டார். 11-ஆம் எதிர்மனுதாரர் கலைவாணிக்கு உரிய முறையில் அறிவிப்பு சார்வுசெய்யாததால் அவருக்கு எதிராக இந்த மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

07. உரிமை வழக்கு ஒன்றில் இறந்துபோன தரப்பினருக்கு எதிராக வழக்கு அற்றுப்போகாமல் இருக்க இறந்துபோன தரப்பினரின் சட்ட முறை சார்பாற்றுநர்களில் ஒருவரை பதிவனத்திற்கு கொண்டுவந்தால் போதும் என்பது நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்புச் சட்டநெறியாகும். இந்த வழக்கில் இறந்துபோன 09-ஆம் பிரதிவாதியின் கணவரான 10-ஆம் எதிர்மனுதாரர் அன்பழகன் இறந்துபோய் இருந்தாலும் அவருடைய மகள் 11-ஆம் எதிர்மனுதாரர் கலைவாணிக்கு எதிராக இந்த மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும் 12-ஆம் எதிர்மனுதாரராக உள்ள இளவர் ஹரினி சார்பாக நீதிமன்ற காப்பாளர் நியமிக்கப்பட்டு அவர் மூலம் ஹரினியின் இந்த வழக்கை நடத்த உள்ளதால் இந்த மனுவை அனுமதிப்பதே உகந்ததாக இருக்கும் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

08. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

**உண்மை/வரைவு ஆணையுரை**

**வ.வி.எண்.01/2019 in மு.வ.எண்.399/2018**

**நாள் 12.08.2025**